**வாக்குமூலம்**
**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி**
**சி.சி.எண்.4/2020**
**வழக்கு சாட்சி – அ.சா.9**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சுப்பிரமணியபிள்ளை | ஜாதி | |
| தந்தை/கணவர் பெயர் | சண்முகம்பிள்ளை | தொழில் | சீனியர் மேனேஜர் (ஓய்வு) |
| கிராமம் | திருநெல்வேலி | சமயம் | |
| தாலுக்கா | | வயது | 61 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 02.08.2024

**(1 முதல் 4 எதிரிகள் வழக்கில ஆஜராவதில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர்.)**

**அரசு தரப்பில் முதல் விசாரணை**

கடந்த 2017 மே மாதம் 3 ம் தேதி முதல் 11.06.2018 வரை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா ஸ்ரீரெங்கபுரம் கிளையின் மேலாளராக பணிபுரிந்து வந்தேன். அந்த சமயத்தில் சுப்புராம் என்பவர் 28.5.2018 அன்று அவரது விவசாயக்கடன் நிலுவைத்தொகை ரூ.1,96,000/– அதை முடித்து அவர் ஆவணங்களை திருப்பிக்கேட்டார். நான் அதன்படியே அவர் கேட்டபடியே ஆவணங்கள் சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா தேனி கிளையில் உள்ளதால் ஒரு கடிதம் கொடுத்து ஆவணங்களை பெற்றுக்கொள்ள சொன்னேன். என்னிடம் காண்பிக்கப்படும் 19.12.2018 ம் தேதியிட்ட ஆவணம் நான் வேலை பார்த்த சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா ஸ்ரீரெங்கபுரம் ல் எனக்கு பின்பு பணிபுரிந்த கிளை மேலாளர் கொடுத்து ஆவணம் ஆகும். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

என்னை போலிசார் 2020 ம் ஆண்டு வேறு கிளையில் பணிபுரியும் போது போனில் அழைத்து விசாரித்தார்கள். என்னிடம் காட்டப்படும் வாக்குமூலத்தில் என்னை 17.1.2019 அன்று விசாரித்தாக தேதி காட்டப்பட்டுள்ளதாக உள்ளது என்றால் எனக்கு தேதி ஞாபகம் இல்லை. அந்த சமயத்தில் நான் சென்னை சவுக்கார்பேட்டை சென்ட்ரல் பேங்க் ஆப் இந்தியா வங்கி கிளையில் பணிபுரிந்தேன் என்றால் சரிதான். நான்

பணிபுரிந்த வங்கி கிளைக்கு வந்து என்னை போலிசார் விசாரிக்க வில்லை என்றால் போனில் தான் என்னை விசாரித்தார்கள். எங்களது வங்கியில் யார் கடன் பெறுகிறார்களோ அவர்கள் தான் பத்திரத்தை திரும்ப பெறும் அதிகாரம் பெற்றவர்கள் என்றால் சரிதான். இந்த வழக்கில் ஜெகதீசன் என்பவர் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. கடன் பெற்றவர் தவிர்த்து ஜெகதீஸ் என்பவர் கேட்டதற்காக அவரிடம் நாங்கள் கடன் ஆவணம் எதையும் கொடுக்கமாட்டோம் என்றால் சரிதான். எங்களது வங்கியில் கடன் பெறும் நபர் மட்டும் வங்கியை அணுகினால் போதும் என்றாலும், இடைத்தரகர்கள் யாரும் தேவையில்லை என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் வங்கிக்கு சுப்புராம் என்பவர் ஜெகதீஸ் என்பவருடன் வந்து கடனை கட்டியதாக நான் கூறவில்லை என்றால் சரிதான். அதேபோல் சுப்புராம் என்பவர் ஜெகதீஸ் என்பவருடன் மறுநாள் வந்து ஆவண எண் 4406/2002 ஆவணத்தை மீட்டுச்சென்றதாக நான் போலிசார் விசாரணையில் கூறினேனா என்றால் இல்லை. அவ்வாறு ஆவணங்களை மீட்டு சென்றிருந்தால் கடனுக்காக என்னென்ன ஆவணங்கள் கொடுக்கப்பட்டதோ அத்தனையும் மீட்டுச் சென்றிருப்பார் என்றால் சரிதான்.